தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

8. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) மசோதா

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) மசோதாவை இந்த மாமன்றத்தின் முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இம் மசோதாவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் மசோதா.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக்கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் மசோதாவை இந்த மாமன்றத்தின் முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகம் படுத்தப்பட்டிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றும் திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றும் திருத்த) மசோதாவை இப் பேரவை முன் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.